


பாலஸ்தீன் போராளி இயக்கங்களுக்கு ஹிஸ்புல்லா, ஏழு விதமான உதவிகளைத் தன் தொடக்க காலத்திலிருந்து செய்து வருகிறது. அவை:

எந்த இயக்கத்தில் புதிதாகப் போராளிகளைச் சேர்த்தாலும் அவர்களை லெபனானுக்கு வரவழைத்துப் போர்ப்பயிற்சி அளிப்பது.

பாலஸ்தீன் இயக்கங்களின் தேவைக்காகவே இஸ்ரேலிய ராணுவ முகாம்களிலிருந்து ஆயுதங்களைக் கடத்தி, பத்திரமாகக் கொண்டுபோய் அவர்களிடம் சேர்ப்பது.

பாலஸ்தீன் இயக்கங்கள் கேட்டுக்கொண்டால், அவர்கள் சார்பில் இஸ்ரேலியத் துருப்புகள் மீதும் இஸ்ரேலிய இலக்குகள் மீதும் தாக்குதல் மேற்கொள்வது.

பெரும்பாலான பாலஸ்தீன் இயக்கங்களுக்கு இஸ்ரேலியத் தலைநகர் உள்ளிட்ட பல முக்கிய நகரங்களில் அதிரடித் தாக்குதல்கள் நடத்த வசதி கிடையாது. அப்படி அவர்கள் திட்டமிடும்போது, பின்னணியிலிருந்து உதவிகள் செய்வது. (குறிப்பாக டெல் அவிவ் நகரில் பாலஸ்தீன் இயக்கங்கள் ஹமாஸ் நீங்கலாக மேற்கொண்ட பல வெடிகுண்டுச் சம்பவங்களின் பின்னணியில் ஹிஸ்புல்லா இருந்திருக்கிறது.)

பாலஸ்தீன் போராளிகளுக்குப் பொருளுதவி செய்வது. (தனக்கு ஈரான் மற்றும் சிரியா அரசாங்கங்கள் அளிக்கும் உதவியில் ஒரு பங்கை பாலஸ்தீன் இயக்கங்களுக்கு வழங்குவது என்பதை ஹிஸ்புல்லா தொடக்ககாலம் முதல் கடைப்பிடித்து வருகிறது.)

பாலஸ்தீன் இயக்கத்தவர்கள் யாரையாவது இஸ்ரேலியப் படைகள் சிறைப்பிடித்தால், பதிலுக்கு இஸ்ரேலிய சிவிலியன்களைக் கடத்திக்கொண்டு போய்விடுவது. சிறைப்பிடித்த போராளிகளை இஸ்ரேல் விடுவித்தால்தான், தான் கைது செய்து வைத்திருக்கும் இஸ்ரேலிய சிவிலியன்களை விடுவேன் என்று அடம்பிடிப்பது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பெரும் தாக்குதல் திட்டங்களுக்கு செயல்திட்டம் வகுத்தளிப்பது. உடனிருந்து ஆலோசனைகள் வழங்குவது. லெபனானில் பாலஸ்தீன் இயக்கங்கள் தங்குதடையின்றி வந்து போவதற்கு, பயிற்சிகள் மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருப்பது.

ஒரு கடமையாகவே கருதி ஹிஸ்புல்லா செய்யும் இத்தகைய உதவிகள், பெரும்பாலான பாலஸ்தீன் போராளி இயக்கங்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையையும் தார்மீக பலத்தையும் தொடர்ந்து தருகின்றன.

என்னதான் தொண்ணூறுகள் வரை இருந்த அளவுக்கு நிலைமை இன்றைக்கு அதிமோசமில்லை, பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற பெயரில், அரேபியர்கள் மேற்குக் கரைப் பகுதி மற்றும் காஸா

பகுதிகளை ஆளத் தொடங்கிவிட்டார்கள் என்றபோதும், இஸ்ரேல் விஷயத்தில் அமைதி என்பது நித்ய கண்டம்தான். எப்போது என்ன நடக்கும், எங்கே அடிப்பார்கள் என்று சொல்லவே முடியாது.

ஆகவே, இத்தகைய போராளி இயக்கங்களுக்கு மட்டுமல்லாமல், சமயத்தில் பாலஸ்தீன் அத்தாரிடிக்கே கூட ஹிஸ்புல்லாவின் உதவி, ஒத்துழைப்புகள் அவ்வப்போது வேண்டித்தான் இருக்கிறது. அதாவது ஆட்சியாளர்களுக்கு.

தேர்தல் வைத்து, ஜனநாயக முறைப்படி பிரதமரெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் ஆட்சி நடக்கிறது. ஆனாலும் இஸ்ரேல் ஊடுருவலும் கைது நடவடிக்கைகளும் தாக்குதல் நடவடிக்கைகளும் இன்றுவரை அங்கே உண்டு. உள்ளூர் ரவுடிகளைப் பிடித்துப் போவதுபோல, அவர்கள் பாலஸ்தீன் அத்தாரிடி அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ரைட் ராயலாக வீடு புகுந்து கைது செய்துகொண்டு போய்விடுவார்கள். அது இன்னொரு தேசம் என்கிற எண்ணம் இஸ்ரேலுக்குக் கிடையாது. அப்படி அது கருதப்பட்டுவிடக் கூடாது என்பதுதான், அவர்களது பிரதானமான கவலையே. அதற்காகவே இத்தகைய காரியங்களைப் பரிபூரண ஆத்மசுத்தியுடன் செய்து வருகிறார்கள்.

தன்னுடைய இந்த அடாவடிகளுக்கு இஸ்ரேல் அரசு சொல்லும் மிக முக்கியக் காரணம் இதுதான்: "பாலஸ்தீன் அத்தாரிடியினர், ஆட்சியாளர்கள் போல் நடந்துகொள்வதில்லை. இன்னும் போராளி இயக்கத்தவர்களாகவே நடந்துகொள்கிறார்கள். பல தீவிரவாத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். ஆயுதக் கடத்தல்கள் நடக்கின்றன."

பாலஸ்தீனியர்களின் இருப்பியல் பிரச்னை அப்படிப்பட்டது. இஸ்ரேலை எப்படி முழுக்க நம்பமுடியும் என்கிற அவர்களது கேள்விக்கு இன்றுவரை யாரும் சரியான பதில் சொல்லுவதில்லை. பாலஸ்தீன் அத்தாரிடிக்கு ஆயுதங்கள் வேண்டும்தான். இயக்கங்களின் ஒத்துழைப்பும் மற்றதும் அவசியம் தேவைதான். சக பாலஸ்தீன் போராளி இயக்கங்கள், ஹிஸ்புல்லா போன்ற கொஞ்சமே கொஞ்சம் வெளியே இருக்கும் இயக்கங்கள் தவிரவும் சில தொலைதூர இயக்கங்களுடனும் அவர்களுக்கு நீடித்த நல்லுறவு கட்டாயம் உண்டு. இதில் ஒளிவு மறைவே இல்லை.

இன்றைக்கு பாலஸ்தீன் அரசியல் உலகில் ஹமாஸ் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக, ஆளும்கட்சியாக எழுந்து நிற்கிறது. யார் எதிர்பார்த்திருப்பார்கள், ஹமாஸ் தேர்தலில் நிற்கும் என்று? அல் காயிதா, ஹிஸ்புல்லா, ஹமாஸ் என்று எப்போதும் இந்த மூன்று இயக்கங்களை ஒன்றாகச் சேர்த்தேதான் மாபெரும் தீவிரவாத இயக்கங்களாக மேற்கு உலகம் சொல்லி வந்திருக்கிறது.

ஹமாஸின் அரசியல் பிரவேசத்துக்கு ஹிஸ்புல்லா ஓர் உந்து சக்தி. ஒரு முன்மாதிரி. போராளி இயக்கமாக உயிர்த்திருப்பதற்கும் அரசியலில் வலுவாக வேரூன்றுவதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதுதான், ஹிஸ்புல்லாவின் சித்தாந்தம். ஏன் நாம் போராளிகளாக இருக்கிறோம்? அரசியல் ரீதியில் சுதந்திரமும் நிம்மதியும் பாதுகாப்பும் கோரித்தானே? இன்றைய அரசியல், நாடாளுமன்ற ஜனநாயகத்தை முன்வைத்துத்தான் சாத்தியம் என்றால் அந்தக் கதவையும் நாம் திறப்போம் என்று முதன் முதலில் அரசியலில் தடம் பதித்த போராளி இயக்கம் ஹிஸ்புல்லாதான்.

அதைப் பார்த்துத்தான் ஹமாஸ் அரசியலுக்கு வந்தது. யாசிர் அராஃபத் இருந்தவரை எத்தனையோ முறை ஹமாஸை இது சம்பந்தமாக வற்புறுத்தி, வலியுறுத்தி, கெஞ்சி, கொஞ்சிக் கேட்டுப் பார்த்திருக்கிறார்.

மசியவில்லையே? ஆனால் ஹிஸ்புல்லா, லெபனான் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த பிறகு, மக்கள் மத்தியில் பெற்ற செல்வாக்கும் ஆதரவும் அவர்களை யோசிக்க வைத்தது. ஒரே

சமயத்தில் அரசியல் கட்சியாகவும், போராளி இயக்கமாகவும் அவர்களால் வெற்றிகரமாகச் செயல்படமுடிவதைப் பார்த்தபிறகுதான், ஹமாஸும் பாலஸ்தீன் தேர்தலில் நிற்கத் துணிந்தது.

இது ஹிஸ்புல்லாவுக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சிதான். ஹமாஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது, நஸருல்லா அதை மனமகிழ்ந்து பாராட்டி வரவேற்றிருக்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் ஹமாஸுக்கு நஸருல்லா அளித்த ஒரே ஒரு அட்வைஸ்: "புதிய ஆயுதம் ஒன்று உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எனில், பழசைத் தூக்கி எறிந்துவிடவேண்டுமென்ற அர்த்தம் இல்லை. இஸ்ரேல் விஷயத்தில் இரண்டின் தேவையும் எப்போதும் இருக்கும்."

சொன்னது சரி என்பதாகத்தான் இன்றுவரை இஸ்ரேலின் நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதையும் பார்க்கவேண்டும்.

பாலஸ்தீன் அத்தாரிடி, ஹிஸ்புல்லா உறவு என்பதை, ஹமாஸ், ஹிஸ்புல்லா உறவு என்பதாகப் பார்ப்பது இன்னும் எளிமையாக இருக்கும்.

தொடக்க காலத்தில் ஹமாஸும், ஹிஸ்புல்லா போலவே இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளுக்கு வாய்ப்பே இல்லை என்றுதான் சொல்லி வந்தது. அது ஒழிக்கப்பட வேண்டிய ஒரு தேசம் என்கிற கருத்துதான் ஹமாஸுக்கும். ஆனால், பாலஸ்தீன் அரசியல் சூழல், ஹமாஸின் இருப்பியல் பிரச்னைகள், மக்கள் நலன், சர்வதேச நெருக்கடி – குறிப்பாகத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு ஹமாஸை வலுக்கட்டாயமாக இஸ்ரேலின் இருப்பை அங்கீகரிக்கும் ஓர் இயக்கமாக மாற்றியது.

இந்த விஷயத்தில் ஹிஸ்புல்லாவுக்குக் கோபம்தான். யாசிர் அரா∴பத், இஸ்ரேலின் இருப்பை அங்கீகரிக்கிறார் என்கிற கோபத்தினால்தான், ஹமாஸ் பி.எல்.ஓ.விலேயே இணையாமல் தனியே நின்று போராடியது. அதே ஹமாஸ், இன்று யாசிர் அரா∴பத் செய்தது போலவே 'இஸ்ரேலை அங்கீகரிக்கிறேன்' என்று சொல்வது என்ன நியாயம்? என்பதுதான் ஹிஸ்புல்லாவின் கேள்வி.

ஹமாஸில் இதற்குப் பதில் இல்லை. ஆனால், இந்த ஒரு முரண்பாட்டினால் ஹமாஸ், ஹிஸ்புல்லா உறவில் பெரிய விரிசல்கள் ஏதும் நேர்ந்துவிடவில்லை. இன்றைக்கும் காஸா பகுதியில் எகிப்திலிருந்து ஆயுதம் எடுத்து வரும் ஹிஸ்புல்லா கப்பல்களுக்குத் துறைமுகம் திறந்தே இருக்கும். அதேபோல, ஹமாஸுக்குத் தேவையான உளவுத் தகவல்களை, ஆயுத உதவிகளை ஜோர்டன் எல்லை வழியே மேற்குக் கரைப் பகுதி ஆட்சியாளர்களிடம் கொண்டுவந்து சேர்க்கிற விஷயத்தில், ஹிஸ்புல்லா மிகத் தீவிரமாக உதவி செய்கிறது.

ரஜார், நப்லஸ், ஜெருசலேம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள ஹமாஸின் பயிற்சி முகாம்களுக்கு ரெகுலராக ஹிஸ்புல்லா வாத்தியார்கள்தான் போய் வகுப்பெடுக்கிறார்கள்.

ஹிஸ்புல்லாவுக்கு ஹமாஸ் மூலம் கிடைக்கும் வெடிமருந்துப் பொருள்கள் அனைத்தும் (ஹமாஸ், வெடிகுண்டு தயாரிப்பில் ஒரு மாஸ்டர் இயக்கம். குண்டு தயாரிப்பில் ஹமாஸ் அளவு நேர்த்தி வேறு எந்த இயக்கத்துக்கும் இன்றுவரை சாத்தியமில்லை.) காஸா கடல் பகுதி வழியே அபூ–ஸ்னான்

(AbuSnan) என்கிற இஸ்ரேல்– லெபனான் எல்லைப் பகுதி கிராமம் வரை ஹமாஸ் போராளிகளால் நேரடியாக எடுத்துச் செல்லப்பட்டு, ஹிஸ்புல்லா முகாம்களில் ஒப்படைக்கப்படுகிறது.

ஹிஸ்புல்லாவுக்குத் தேவையான கம்ப்யூட்டர்கள், சிப்கள், வயர்லெஸ் கருவிகள் போன்றவற்றை, தென்னமெரிக்க நாடுகளிலிருந்து ஹமாஸ்தான் வாங்கி அனுப்புகிறது. பதிலுக்கு, தனக்குக் கிடைக்கும் ஈரானிய நிதி உதவியிலிருந்து கணிசமான ஒரு தொகையை ஹமாஸுக்கு ஹிஸ்புல்லா வழங்குகிறது. இந்த உதவிகள், உறவு எல்லாம் ஒளிவு மறைவில்லாதவை.

ஹமாஸுடன் மட்டுமல்லாமல் ஏனைய அனைத்து பாலஸ்தீன் போராளி இயக்கங்களுடனும் ஹிஸ்புல்லாவுக்கு இதேமாதிரியான நல்லுறவு உண்டு. ஒரே ஒரு வித்தியாசம். ஹமாஸ், ஹிஸ்புல்லாவுக்குச் செய்யும் பதில் மரியாதைகள்போல் மற்ற இயக்கங்கள் செய்வதில்லை. வசதி அதிகமில்லாத போராளி இயக்கங்கள் பல, ஹிஸ்புல்லாவின் உதவியுடன் தான் உயிர்த்திருக்கவே செய்கின்றன!

ஹிஸ்புல்லாவின் வலுவான ஜனநாயக அரசியல் பின்னணியும் இதற்கு ஓரெல்லை வரை காரணம். லெபனானில் அவர்கள் ஷியாக்களின் முழு ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். இப்போதைக்கு நாடாளுமன்றத்துக்குச் சில எம்.பி.க்களை அனுப்பும் அளவுக்குப் பிரபலமான இயக்கமாக அறியப்பட்டாலும், விரைவில் லெபனான் நாடாளுமன்றத்தையே தலைமை தாங்கக்கூடிய அளவுக்கு முன்னேறிவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஒரு சில மேற்கு நாடுகள் தவிர, பெரும்பாலான ஐரோப்பிய தேசங்கள் ஹிஸ்புல்லா விஷயத்தில் பிரமாதமான கண்டனங்களையோ, குற்றச்சாட்டுகளையோ முன்வைக்காததற்கு இது ஒரு முக்கியக் காரணம். இஸ்ரேலின் தொல்லைகள் இல்லாது போயிருந்தால், கண்டிப்பாக ஹிஸ்புல்லா தோன்றியிருக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அமெரிக்கப் பின்புலத்தில் வேலை செய்யும் இஸ்ரேலை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாதபடியால், ஹிஸ்புல்லா விஷயத்தில் வாய்மூடி இருக்கவேண்டியதாகிறது.

எதிர்காலத்தில் கண்டிப்பாக ஹிஸ்புல்லா ஒரு பூரண அரசியல் இயக்கமாகவே மாறிவிடும் என்று சொல்வோர் உண்டு. அது ஹிஸ்புல்லாவின் கைகளில் இல்லை. இஸ்ரேலிடம்தான்!

ஜூலை 12, 2006 அன்று தொடங்கி ஆகஸ்ட் 15-ம் தேதிவரை உக்கிரமாக நீடித்த இஸ்ரேல்-ஹிஸ்புல்லா யுத்தம் குறித்து லெபனான் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிவதற்காக, சில மேற்கத்திய சர்வே ஏஜென்சிகள் லெபனானில் மக்கள் கருத்தைக் கேட்டு வீதி வீதியாகப் பயணம் மேற்கொண்டார்கள்.

இந்தக் கருத்துக் கணிப்பின் முடிவின்படி, 87 சதவிகித லெபனான் மக்கள், ஹிஸ்புல்லாவின் தாக்குதல் சரியானதுதான் என்று நினைக்கிறார்கள். கவனிக்கவும். லெபனான் ஷியா முஸ்லிம்கள் மத்தியில் மட்டும் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு இல்லை இது. மாறாக, ஒட்டுமொத்த லெபனான் வாக்காளர்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி.

இது அமெரிக்கா, இஸ்ரேல் மட்டுமல்லாமல், லெபனானிலேயே ஷியா அல்லாத பிற அரசியல் கட்சிக் கூட்டணிகள் மட்டத்திலும் மிகுந்த அதிர்ச்சியையும் வியப்பையும் ஒருங்கே ஏற்படுத்தியிருக்கிறது.

“சந்தேகமில்லாமல் ஹிஸ்புல்லா, மக்களின் மனநிலையை, விருப்பத்தைப் பிரதிபலிக்கும் இயக்கமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இதை முன்கூட்டியே கணித்ததனால்தான் அவர்களுக்கு என்னுடைய அமைச்சரவையிலும் இடம் கொடுத்தேன்” என்று லெபனான் பிரதமர் ஃபாத் ஸினியோரா சொல்லியிருக்கிறார்.

மக்களின் இந்த ஆதரவு நிலைப்பாடு அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தொடருமானால், கண்டிப்பாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஹிஸ்புல்லா இன்னும் மிகப்பெரிய அரசியல் சக்தியாக உருவெடுத்தே தீரும்!